**MCOP NO:1092/2024** **DATE: 18.03.2026**

ம.சா :1

பெயர் : திரு.ஸ்ரீனிவாசன்

த/பெ : திரு.துரைக்கண்ணு

வயது : 61

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 11 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தானது 04.08.2023 ல் இரவு 07.30 மணிக்கு நடந்தது. நான் என் அலுவலக பணியை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக பேருந்திலிருந்து இறங்கி வீட்டிற்கு சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டது. நான் வழக்கமாக பேருந்தில் தான் பணிக்கு செல்வேன். நான் குடியிருக்கும் பகுதிக்கும், எனது அலுவலகத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 லிருந்து 6 கி.மீ வரை இருக்கும். நான் சாலையை கடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பேருந்து நிறுத்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பேருந்து நிறுத்தம் இருந்தது. என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் பேருந்து நிறுத்தம் காட்டப்பட்டுள்ளதா என்றால் இதில் காட்டப்படவில்லை, ஆனால் நான் சொல்லும் இடத்தில் தான் பேருந்து நிறுத்தம் உள்ளது. விபத்து குறித்து புகார் என் மனைவி தான் கொடுத்தார். என் மீது மோதிய வாகனத்தின் பதிவு எண் TN DC 8340 ஆகும். முதல் தகவல் அறிக்கையில் வாகனத்தின் பதிவு எண் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அது என்ன வகையான வாகனம் என்று அதில் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. Motorcycle என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்டவுடன் ஆம்புலன்ஸ் மூலமாக எஸ்.ஆர்.எம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். விபத்து பதிவேட்டில் எஸ்.ஆர்.எம் மருத்துவமனையிலிருந்து விபத்து சம்பந்தமாக காவல் துறைக்கு தகவல் தெரிவித்தது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்த போது தகவலின் பெயரில் என்னை போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. மேற்படி மருத்துவமனையிலிருந்து சுமார் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். விபத்து ஏற்பட்டு 14 நாட்கள் கழித்து தான் என் மனைவி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவர் என்னை மருத்துவமனையில் பராமரித்து வந்ததால்

அதனால் காலதாமதம் ஏற்பட்டது. பின்னிட்டு செப்டம்பர் 12ம் தேதி இரண்டாவது முறையாக என் கையில் பொருத்தப்பட்ட Wire அகற்றுவதற்காக அதே மருத்துவனையில் நான் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன். விபத்தின் போது சிங்கபெருமாள் கோவிலில் உள்ள India Motor Parts and Accessories என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தேன். அதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி நிறுவனத்தில் எனக்கு அனைத்து பண சலுகைகளும் உண்டு. எங்கள் நிறுவனத்தில் மருத்துவ காப்பீட்டு முறை பின்பற்றப்படவில்லை. விபத்திற்கு பின்னிட்டு இரண்டரை மாதம் வேலைக்கு செல்லவில்லை. இரண்டரை மாதம் வேலைக்கு செல்லாததற்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பதை காட்டுவதற்கு நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மருத்துவ செலவு பில்களை என் மனைவி தான் மருத்துவமனைக்கு செலுத்தினார். என் மனைவி தான் மருத்துவ செலவு தொகையை மருத்துவமனைக்கு செலுத்தினார் என்று குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. பணம் செலுத்தியவரின் பெயர் அந்த பில்லில் போடமாட்டார்கள். விபத்தின் போது நான் Pillion Rider ஆக பயணம் செய்தேன் என்றும், நான் பயணம் செய்த அந்த வாகனத்திற்கு Act Policy மட்டும் தான் உள்ளது என்பதால் அந்த வாகனத்தின் உரிமையாளர் மீது மனு தாக்கல் செய்தால் இழப்பீடு கிடைக்காது என்ற எண்ணத்துடன் நான் நடந்து சென்ற போது விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனமானது எந்த நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் கிடையாது என்றால் சரியல்ல. நான் பணிபுரிந்த India Motor Parts and Accessories நிறுவனத்தை விசாரித்தால் தான் நான் எத்தனை நாட்கள் விடுப்பில் இருந்தேன் என்றும், எத்தனை நாட்கள் பணியில் இருந்தேன் என்றும் தெரியவரும் என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக 2ம் எதிர்மனுதாரரின் புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்த போது நான் Toyata நிறவனத்தின் பனியனை அணிந்துள்ளதால் அந்த நிறுவனத்தில் பணிபுரிந்தேன் என்று காட்டியுள்ளார் என்றால் அது தவறு. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சொற்ப காயங்கள் என்றும், விபத்திற்கு பின்னிட்டும் நான் பணி செய்து வருவதால் எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 18.03.2026ல் அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.